அ.வ.எண்.111/2014 – 09.12.2019 – வா.சா.2 பாஸ்கரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி–

சாட்சியிடம் இவ்வழக்கு புரோநோட் வாதிதரப்பில் காண்பிக்கப்பட்டு கையெழுத்தை அடையாளம் காட்டவேண்டும் என்று கேட்கப்பட்டது, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அப்போது உடன் இருந்தார், சாட்சியிடம் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து குறித்துகேட்டபோது சாட்சி தன்னுடைய கையெழுத்தையும், பிரதிவாதியுடைன கையெழுத்தையும் அடையாளம் காட்டினார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் கோபியில் பைனான்ஸ் தொழில் செய்கிறேன், அட்டை வியாபாரம் இரண்டு ஆண்டுகளாக செய்கிறேன். அதற்காக தனியாக அலுவலகம் வைத்திருக்கவில்லை. இதற்கு முன்னர் திருப்பூரில் கணக்கு எழுதும் தொழில் செய்தேன். பைனான்ஸ் தொழில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் உங்களுக்கு பரிச்சயம் உண்டு என்றால் சரி. பாண்டு எழுதுவது பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் வருமான வரி 3 ஆண்டுகளாக செலுத்துகிறேன். உங்கள் மீது பல குற்றவியல் வழக்குகள் இருக்கிறதா என்றால் ஒரு வழக்கு இருந்தது முடிந்துவிட்டது. ஜி.கே.பழனிச்சாமி எனது சின்னம்மா மகன். ஜி.கே.பழனிச்சாமி பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். ஜி.கே.பழனிச்சாமிக்கு அவருடைய தொழிலில் பிரச்னை என்றால் நீங்கள் உதவி செய்வீர்களா என்றால் இல்லை. ஜி.கே.பழனிச்சாமிக்கு பாலசுந்தரம் பணம் கொடுக்கவேண்டியிருந்தது என்றால் அது பொய் வழக்கு, அது கணபதிக்குத்தான் தெரியும். உங்கள் பெயரிலும், கணபதி, ஜி.கே.பழனிச்சாமி ஆகியோர் பெயரில் புகார் கொடுத்து வழக்கு நடந்தது என்றால் நடந்தது. அது அமர்வு வழக்கு எண்.27/15 என்றால் தெரியாது. அதில் வழக்கறிஞர் திரு.எல்.ஆர்.பாலசுப்ரமணியம் எனக்காக ஆஜரானார். அந்த வழக்கில் நீங்கள் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததுஎன்றால் சரி. அதன் மீதுமேல்முறையீடு தாக்கல் செய்தேன். அதில் கணபதி, ஜி.கே.பழனிச்சாமி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். இதேபோன்று ஒரு ஆள்கடத்தல் வழக்கில் திருப்பூரில் உங்கள் மீது ஒரு வழக்கு இருந்தது என்று சொன்னால் செட்டில் பண்ணுவதற்காக செய்யப்பட்ட நாடகம் அது. ஜி.கே.பழனிச்சாமி பணம் கொடுத்து வாங்கும்போது ஆள்கடத்தல் நாடகம் நடத்தப்பட்டதா என்றால் அவர் நடத்தியிருந்தார். அதில் நீங்கள் எல்லாவற்றிலும் கலந்து கொள்வீர்கள் என்றால் அது உண்மையல்ல. ஆனால் உங்களுடைய பெயர் அதில் சேர்க்கப்பட்டது என்றால் சரி. பாண்டில் சாட்சி கையொப்பமிட உங்களை யார் அழைத்தார் என்றால் கணபதி அழைத்தார். கணபதி என்னை 20.01.2012ல் காலையில் சுமார் 9 மணிக்கு அழைத்தார். 10

மணிக்கு வரச்சொன்னார், நான் வந்தேன். வாதி எனதுசித்தப்பா அவரது வீட்டிற்கு வந்தேன். அங்கு நான் செல்வதற்கு முன்பு பிரதிவாதியும், வாதியும் அங்கிருந்தார்கள். மற்றொரு சாட்சி அப்பாஸ். அவர் எப்போது வந்தார் என்றால் அவர் அங்கே இருந்தார் அவர் எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது. வீட்டில் உறாலில் வைத்து எழுதப்பட்டது. பாண்டு எத்தனை மணிக்கு எழுத ஆரம்பித்தார்கள் என்றால் 10ல் இருந்து 11 மணிக்குள் எழுதப்பட்டது. பாண்டிற்கு வாசகங்கள் யார் சொன்னார்கள் என்றால் கணபதி சொன்னார். தொகை, வட்டி எல்லாம் யார் சொன்னார்கள் என்றால் கணபதி தொகை சொன்னார் வட்டி பரமேஸ்வரன் சொன்னார். எந்த தேதி பாண்டில் இருந்தது என்றால் 20.01.2012. தமிழ்தேதி ஆண்டு வருடம் எனக்கு தெரியாது. தமிழ்தேதி வருடங்கள் காலண்டரை பார்த்து எழுதினோம். பாண்டு, ஸ்டாம்ப் ஆகியவற்றை கணபதி வாங்கி வந்தார். பாண்டு எழுதுவதற்கு முன்பு பிரதி எழுதப்பட்டதா என்றால் முதலில் ஒரு பாண்டு எழுதினோம் அதை கிழித்துவிட்டு மீண்டும் ஒரு பாண்டு எழுதினோம். பாண்டு எழுதிய பிறகு கணபதி ஸ்டாம்ப்பில் கையெழுத்திட்டார், அப்பாஸ் கையெழுத்திட்டார். அதன் பின்னிட்டு நான் சாட்சி கையெழுத்திட்டேன். அப்பாஸ் விலாசத்தை நான் தமிழில் எழுதினேன். பூர்த்தி செய்வதற்காக நீங்கள் எழுதியுள்ள கையெழுத்திற்கும், விலாசத்தை எழுதிய கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் அப்பாசுடைய விலாசத்தை அப்பாஸ் எழுதியதாக சாட்சி தெரிவிக்கிறார். பிரதிவாதியின் இடதுகை பெருவிரல் ரேகை வாங்கவில்லை என்றால் சரி. எதனால் கைரேகை வாங்கவில்லை என்றால் கணபதி நம்பிக்கையாக இருந்தார். கணபதியின் கையெழுத்து ஒரு ஸ்டாம்பின் மீதுதான் உள்ளது என்றால் சரி. மற்றொரு ஸ்டாம்பின் மீது எதனால் கையெழுத்தில்லை என்பதற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. 2015ம் ஆண்டு கணபதி விற்பவராக இருந்து எழுதி கொடுததததாக கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் சாடசியிடம் காண்பித்துஅதில் உள்ள கையெழுத்து குறித்து அது யாருடைய கையெழுத்து என்று கேட்கப்பட்டது அது கணபதியின் கையெழுத்து என்று சாடசி தெரிவித்தார். புரோநோட்டில் உள்ள கையெழுத்திற்கும் கிரைய பத்திரத்தில் உள்ள கணபதி என்ற கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் உள்ளதா என்று சாட்சியிடம் கேட்கப்பட்டது சாட்சி வித்தியாசம் இல்லை என்று தெரிவித்தார். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து உங்களால் ஜி.கே.பழனிச்சாமிக்காக போடப்பட்டதா என்றால் இல்லை. அப்பாஸ் உங்களுக்கு நெருங்கிய நண்பர் என்றால் இல்லை. அவர் என்ன தொழில் செய்கிறார் என்று தெரியாது. அவர் கூகலூரைச் சேர்ந்தவர். ஜி.கே.பழனிச்சாமிக்கு நீங்கள், துரைராஜ். பரமேஸ்வரன் அனைவரும் சேர்ந்து

உதவி செய்ய வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.1 புரோநோட்டை தயாரித்து வாதியை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாண்டை முதன்முதலில் பார்த்தீர்கள் என்றால் 2012ல் கையெழுத்து போடும்போது பார்த்தேன். அதன்பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். அட்டை கம்பனி தொழிலை ஆரம்பித்து ஒன்றரை ஆண்டு ஆகிறது தேதி தெரியாது. பைனான்ஸ் தொழிலும் 2 ஆண்டுகளுக்குள் ஆரம்பித்தேன் தேதி தெரியாது. வாதி சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன தேதியில் புரோநோட் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கணபதியும் கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு சுமார் கால்மணிநேரத்தில் எழுதி முடித்துவிட்டோம். பாண்டை எழுதி முடித்து எல்லோரும் சாட்சி கையொப்பமிட்ட பிறகு பரமேஸ்வரன் பாண்டை வாங்கிக்கொண்டார். பணம் யார் கொடுத்தார்கள் என்றால் பரமேஸ்வரன் பணம் கொடுத்தார். எவ்வளவு பணம் என்றால் ரூ.4 லட்சம் கொடுத்தார். 4 கட்டாக கொடுத்தார். பிரதிவாதியின் கையெழுத்து பாண்டில் இல்லை, உங்கள் முன்னிலையில் வாதி பிரதிவாதிக்கு ரூ.4லட்சம் தொகை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஜி.கே.பழனிச்சாமி உங்களுக்கு வேண்டியவர் என்பதால் வாதியை வைத்து உங்கள் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.